**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 107/2017**

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09–ம் நாள் வெள்ளிக்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 09.02.2024 | தந்தை பெயர்: | நாராயணசாமி |
| பெயர்: | குருமூர்த்தி<br>(PW-1 Chief ) | வயது : | 48/2024 |
| கிராமம்: | திருவெண்காடு | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை : 09.02.2024.**

நான் இவ்வழக்கின் 2–ம் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

20.06.1980–ம் தேதியிட்ட எனது தகப்பனார் பெயரில் உள்ள கிரய பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது) 27.05.2015–ம் தேதியிட்ட 01.01.1980 முதல் 31.12.1986 தேதி வரையிலான வில்லங்க சான்றின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 16.12.2016–ம் தேதியிட்ட 01.01.2015 முதல் 15.12.2016 வரையிலான வில்லங்க சான்றின்

உண்மை நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 22.01.2015-ம் தேதியிட்ட 01.01.1987 முதல் 31.05.2003 வரை யிலான வில்லங்க சான்றின் உண்மை நகலை தாக்கல் செய்கிறேன் **அது வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.